1993 மார்ச் 23]

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்குகள் பிடிவாதத்திற்குப் பெயர் போன விலங்குகள், குரங்கு சேஷ்டை என்றும், குரங்குப்பிடி என்றும் பேசும் அளவுக்கு நடந்து கொள்ளக் கூடியவை. ஓர் இடத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்ட குரங்குகள் தாமாகவோ அணி சேர்த்துக் கொண்டோ மீண்டும் அந்த இடத்திற்கு வர வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கக்கூடியவை. அவைகள் எப்படியேனும் மீண்டும் பழைய இடத்தைப் பிடிக்க வேண்டுமென்று முயற்சி எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. (சிரிப்பு) இதைத் தடுக்கும் வகையில் ''வாலியை வதம் செய்த இராமனைப் போல தீமைகளை சுட்டெரித்து'' இங்கே நல்லாட்சியை, பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குரங்குகள் மீண்டும் பழைய இடத்துப் பக்கம் தலை வைத்துப் படுக்கவே விடாத அளவுக்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நிச்சயமாக இது போன்ற குரங்குகள் அந்தப் பகுதிக்கு வரவிடாமல் தடுப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 154, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

154—

பரமக்குடி தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய பயிற்சிகளைத் துவக்குதல்.

*14719—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொழிற் பயிற்சி நிலையத்தில் தட்டச்சு, வானொலி தொலைக்காட்சி தையல் பயிற்சி ஆகியவை ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

(1993 மார்ச் 23

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிட்டர், டர்னர், ஒயர்மேன், மோட்டார் மெக்கானிக், வெல்டர், கார்பென்டர் போன்ற 6 பயிற்சிகள் 1960ம் ஆண்டு, 37 ஏக்கர் நிலப் பரப்பில் பரமக்குடியில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தையல், தட்டச்சு, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற டிரேட்-கள் ஆரம்பிக்கும் திட்டம் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. பின்தங்கிய மாவட்டமான இராம நாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொழிற்பயிற்சி நிலை யத்தில் மேற்கூறிய 4 டிரேட்களை ஆரம்பிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் முன்வர வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்தை மறு பரி சீலனை செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டச்சு தொழில் பிரிவு தற்போது என்.சி.வி.டி. யில் இல்லை. துணி வெட்டுதல், தைத்தல், கம்மியர், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய பிரிவு கள் இருக்கின்றன. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது பரமக்குடி, இராமநாதபுரம் மற்றும் முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் அரசினர் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில், மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பிரிவு இராமநாதபுரத்தில் இப்போது இயங்கி வருகிறது. புதி தாக 32 இருக்கைகள் கொண்ட ஒரு யூனிட் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், துணி வெட்டுதல், தைத்தல் பிரிவிற்குக் கட்டிடங்கள், இயந்திரங்கள் மரச்சாமான்கள் போன்ற தொடரா இனச் செலவாக 4 இலட்சம் ரூபாயும் அலுவலர் ஊதியம் மட்டும் பயிற்சிக்கு தொடர் இனச் செல வாக 97 ஆயிரம் ரூபாயும் செலவு ஏற்படும். அதைப்போல வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பிரிவிற்கு தொடரா இனச் செலவாக 7.5 இலட்சம் ரூபாயும் தொடர் இனச் செல வாக 97 ஆயிரம் ரூபாயும் செலவு ஏற்படும். எனவே அர சினுடைய நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு இப்போது

1993 மார்ச் 23)

பரமக்குடியில் அந்தப் பிரிவுகள் ஆரம்பிக்கும் எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.

(முற்பகல் 10-50)

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஏழை எளிய மக்களை வாழ்விக்க பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பவனி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டாவது அங்கே ஆரம்பிப்பார்களா ? அங்கே இடம் இருக்கிறது. பரமக்குடியில் கட்டிடம் இருக்கிறது. அரசுக்கு அந்த டிரேடுகளை ஆரம்பிக்கும் செலவுதான் ஏற்படும். இடம் வாங்குவதற்கோ, கட்டிடங்கள் கட்டுவதற்கோ தனியாக செலவு ஏற்படாது. 30 ஏக்கர் நிலம் தனியாக அரசின் சார்பில் இருக்கிறது. அவ்வாறு இருக்கும் இடத்திலே ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டிலாவது பரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நிதி நிலைமை இடம் கொடுத்தால் வரும் ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 155, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

155 —

திருச்சி வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களுக்கு அடுக்கு மாடிக் கட்டிடம்.

*13840—டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி நகரத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களுக்கு வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தில் போதிய இட வசதி உள்ளதால் அடுக்கு மாளிகை (Multi-storeyed Building) கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?